**செ.வெ.எண்:17** **நாள்:07.10.2020**

# பத்திரிக்கைச் செய்தி

மனித ஆரோக்கியத்தில், ஊட்டச்சத்து நிறைந்த காய்கறிகளுக்கு குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு தினசரி உணவு பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு காய்கறிகளை (நபர் ஒருவருக்கு 1 நாளைக்கு 300 கிராம் காய்கறிகள்) வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப வழங்குவதற்கு காய்கறி உற்பத்தி பரப்பினை அதிகரிப்பது தவிர்க்க முடியாதது ஆகிறது. காய்கறி சாகுபடியின் கீழ் அதிக பகுதியை கொண்டுவர சான்றளிக்கப்பட்ட மற்றும் தரமான விதைகளை நியாயமான விலையில் போதுமான அளவில் சரியான நேரத்தில் வழங்குவது அவசியமாகிறது. எனவே, காய்கறி விதை உற்பத்தி இத்தருணத்தில் மிகவும் அத்தியாவசியமாகிறது.

எனவே, இவ்விதைத்தேவையின் முக்கியத்துவத்தையும், காய்கறி விதை உற்பத்தியை இலாபகரமான வியாபாரமாக முன்னெடுப்பதற்கான பெரும் வாய்ப்பையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு வேளாண் அமைச்சர் அவர்களால் 24.03.2020 அன்று சட்டமன்றத்தில் நடைபெறும் வேளாண் துறைக்கான மானியக் கோரிக்கையின் போது ரூ7 கோடியே 50 இலட்சம் செலவில் "தொழில்முனைவோர்கள் மூலம் நாற்றாங்கால் மற்றும் காய்கறி விதை உற்பத்திக்கான திட்டம்" அறிவிப்பு செய்யப்பட்டது.

இவ்வறிவிப்பின்படி, விதை உற்பத்தி செய்யும் விவசாயிகள் / தோட்டக்கலை தொழில் முனைவோர்கள் மூலம் 20.43 எக்டர் பரப்பளவில் சுமார் 3.887 மெட்ரிக் டன் சான்றளிக்கப்பட்ட / உண்மை நிலை காய்கறி விதைகளை உற்பத்தி செய்ய இலக்கிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட விதை விவசாயிகள் / தோட்டக்கலை தொழில் முனைவோர்களுக்கு, வெங்காயம், முருங்கை காய்கறி காராமணி, கொத்தவரை, அவரை, பாகல், புடல், பீர்க்கு, பூசணி மற்றும் கீரை முதலிய காய்கறிப் பயிர்களின் சான்றளிக்கப்பட்ட / உண்மை நிலை விதைகளை உற்பத்தி செய்வதற்கு உதவியாக விதைச்சான்றிதழ் பெறுவதற்கும், விதை கொள்முதல் செய்வதற்கும், ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து மேலாண்மை / ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையை மேற்கொள்ளவும், நிழல்வரை குடில், சிப்பம் கட்டும் அறை மற்றும் நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கும் மானியம் வழங்கப்படும்.

குறைந்தபட்சம் 0.2 எக்டர் முதல் அதிகபட்சம் 2 எக்டர் வரை உறுதி செய்யப்பட்ட நீர்ப்பாசன வசதியுடன் கூடிய நிலம் கொண்ட விவசாயிகள் இந்த உதவிகளைப் பெறலாம். விதை உற்பத்தி செய்யும் விவசாயிகள் தங்கள் விதைகளை தனியார் நிறுவனங்கள் / பிற விவசாயிகளுக்கு அல்லது தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமைக்கு விற்பனை செய்யலாம்.

இத்திட்டத்தில், சான்றளிக்கப்பட்ட காய்கறி விதைகளை மட்டும் உற்பத்தி செய்வதற்கு, விதை சான்றிழ் கட்டணம் எக்டருக்கு ரூ.400 வழங்கப்படுகிறது. சான்றளிக்கப்பட்ட / உண்மை நிலை விதைகளை உற்பத்தி செய்வதற்கு வழங்கப்படும் இதர உதவிகளானது ஒரு எக்டரில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை / ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை நடைமுறைகளை மேற்கொள்வதற்கு 30 சதவீதம் மானியத்தில் அதிகபட்சமாக ரூ.1200/-ம், 9 மீ * 6 மீ அளவு கொண்ட ஒவ்வொரு சிப்பம் கட்டும் அறை கட்டுமானத்திற்கும் 50 சதவித மானியத்தில் அதிகபட்சமாக ரூ.2 இலட்சமும், நிழல் வலைக்குடில் கட்டுமானத்திற்கு 50 சதவீதம் மானியத்தில் ஒரு சதுர மீட்டருக்கு அதிகமாக ரூ.355/- வீதம் குடில் பரப்பளவிற்கு ஏற்ப மானியமும் மற்றும் ஒரு எக்டரில் நுண்ணீர் பாசனம் நிறுவுவதற்கு ரூ.1,13,133/-ம் (இடைவெளியின் அடிப்படையில் மாறுபடும்) மானியமாக வழங்கப்படும்.

இத்திட்டம் குறித்து மேலும் விபரங்களைப் பெறுவதற்கும், இத்திட்டத்தில் இணைந்து பயன்பெறுவதற்கும் விவசாயிகள் அரியலூர் மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை துணை இயக்குநரையோ அல்லது வட்டாரத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர்களையோ தொடர்பு கொள்ளலாம் மற்றும் உழவன் செயலியில் பதிவு செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**